# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 3 | **செய்தி மடல்** | எண் : 1

ஜனவரி - மார்ச் 2018



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **நி.கு. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **சி. சங்கர்**
மருத்துவர் **ம. ஜோதிலெட்சுமி**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிச்சோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. ஜனவரி முதல் மார்ச் 2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் 2001 குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் விவசாயிகள் வருமானத்தை இருமடங்காக்குதல் பற்றிய உரையின் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி**

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் 2001 குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியுடன் சேர்த்து பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் விவசாயிகள் வருமானத்தை இரு மடங்காக்குதல் குறித்த உரையின் நேரடி ஒளிபரப்பையும் அக்ரி பன்னீர் பாப்பாத்தியம்மாள் திருமண மண்டபத்தில் 17.03.2018 அன்று நடத்தியது. இவ்விழாவில் 576 விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்கள். மாண்புமிகு. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள், மாண்புமிகு. சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் மருத்துவர் வி. சரோஜா அவர்கள், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம் அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள் மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன் சரஸ்வதி அவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து விவசாயிகளுக்கு வருமானத்தை இருமடங்காக்க தேவையான இடுப்பொருட்களை வழங்கினார்கள். இத்துடன் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கக்கூடிய தொழில்நுட்பங்களான சொட்டுநீர் பாசனம், மதிப்பூட்டிய பொருட்கள் தயாரிப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த உரையின் நேரடி ஒளிபரப்பு காண்பிக்கப்பட்டது. விழாவில் முனைவர் பெ. முருகன், உதவிப்பேராசிரியர் (உழவியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் வரவேற்புரை வழங்கினார்.

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். கணேஷ்ராம் அவர்கள் பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் 2001 மற்றும் பண்டைய இரகங்களை பாதுகாப்பது குறித்த தொழில்நுட்ப உரையும் மற்றும் சென்னை பெட்ரோலியத்துறை மண்டல மேலாளர் திரு. எஸ்.பி. செல்வம் அவர்கள் பெட்ரோலிய பாதுகாப்பு குறித்த தொழில்நுட்ப உரையும் வழங்கினார்கள். இவர்களுடன் நாமக்கல் மாவட்ட இதர துறை அலுவலர்களும் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் நாமக்கல் மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள பண்டைய பயிர் இரகங்கள், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம் சம்பந்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கக்கூடிய

தொழில்நுட்பங்கள் அடங்கிய மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தது. பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் 2001 குறித்த கையேடும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு சிறப்பு விருந்தினர்களின் வருகை**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் 27.03.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகை புரிந்தார். அப்பொழுது 2018 - 19 - ஆம் ஆண்டிற்கான முதல்நிலை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளி ஆய்வு குறித்த செயல்திட்டங்களை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் எடுத்துரைத்த போது அத்திட்டங்கள் நீண்டகால சாதனை அடைய வேண்டும் எனவும் விவசாயிகளின் வாழ்வாதரத்தை மாற்றக்கூடியதாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



மேலும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம் அவர்கள் வேளாண் அறிவியல் நிலையம் மோகனூர் வட்டாரத்தில் செயல்படுத்தியுள்ள முதல்நிலை செயல்விளக்கங்களான துளுக்கசாமந்தி திடல், நாட்டுக்கோழி மற்றும் மீன் பண்ணை ஆகியவற்றை 05.01.2018 அன்றும், ஆர். புதுப்பட்டியில் வழங்கப்பட்டுள்ள சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரிக்கும் இயந்திரங்களின் பயன்பாட்டினை 09.01.2018 அன்றும் பார்வையிட்டார்.

**உள்ளிடப்பயிற்சிகள்**



வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 21 உள்ளிடப்பயிற்சிகள் 687 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இயற்கை விவசாயம், மாடித்தோட்டம் அமைத்தல், பயறு வகைகள் மற்றும் பழப்பயிர்களின் சாகுபடி குறிப்புகள், ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, தேனீ வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, மாற்றுக்கோழி பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற தலைப்புகளில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

**இதர துறைகளுடன் வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து மேற்கொண்ட பயிற்சிகள்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்பு துறைகளுடன் இணைந்து 32 வெளியிடப்பயிற்சிகளை மேற்கொண்டது. இதில் 943 விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். மரவள்ளிக்கேற்ற மானாவரி சாகுபடி குறிப்புகள், காய்கறி சாகுபடியில் நவீன சாகுபடி குறிப்புகள், வறட்சி மேலாண்மை, கூட்டு மீன் வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

**நிதியுதவியுடன் கூடிய பயிற்சிகள்**



கிராம இளைஞர்களுக்கான அங்கக வேளாண்மை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மாநில அளவிலான வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிறுவனம், ஹைதராபாத் நிதியுதவியுடன் 12.02.2018 முதல் 17.02.2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 28 பயிற்சியாளர்களுக்கு நடத்தப்பட்டது. நீடித்த நிலைத்த மகசூலை அடைய பயிற்சியாளர்களுக்கு அங்கக வேளாண்மை சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் ஆபர் அரசு சாரா நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலங்கை அகதிகளுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் தொழில் முனைவோராக மாற்றவும் கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சி 45 அகதிகளுக்கு வழங்கப்பட்டது.

**கட்டண பயிற்சிகள்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் இரண்டு கட்டண பயிற்சிகளை நடத்தியது. கல்லூரி மாணவர்களுக்கு நவீன காய்கறி சாகுபடி குறிப்புகள் என்ற தலைப்பில் 23.01.2018 அன்றும் தேனீ மற்றும் காளான் வளர்ப்பு என்ற தலைப்பில் 15.02.2018 அன்றும் 57 விவசாயிகளுக்கு அறிவியல் நிலையத்தில் நடத்தியது. காய்கறி சாகுபடி சம்பந்தமாக மற்றும் தேனீ வளர்ப்பிற்கு தேவையான உபகரணங்கள் குறித்த விபரங்கள் பயிற்சிகளில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

**வெளியிடப்பயிற்சிகள்**



கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப 9 வெளியிடப் பயிற்சிகளை விவசாய நிலங்களில் 195 விவசாயிகளைக் கொண்டு நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தியது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையிலுள்ள முக்கியப் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**மாதாந்திர மண்டல பணிமனைக்கூட்டம்**

மண்டல மாதாந்திர பணிமனைக்கூட்டம் 10.01.2018 அன்று 35 களப்பணியாளர்களுக்கு



வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பருவநிலைகேற்ற சாகுபடி குறிப்புகள் பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் உள்ள பிரச்சனைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.

**கண்காட்சி மற்றும் கருத்தரங்கு**



வேளாண்மை அறிவியல் நிலையம் இரண்டு தொழில்நுட்ப கண்காட்சியை வயல்வெளி பள்ளி வயல் விழா 20.02.2018 அன்றும், பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச்சட்டம் 17.03.2018 அன்றும் நடத்தியது. மொத்தமாக 646 விவசாயிகள் இக்கண்காட்சியினை பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். இக்கண்காட்சியில் பாரம்பரியமிக்க பயிர் இரகங்கள், தீவன விதைகள், காய்கறி விதைகள், மதிப்பூட்டிய சிறுதானியப் பொருட்கள், இதர துறையிலுள்ள புதிய தொழில்நுட்பங்கள் வைக்கப்பட்டிருந்தது. வேளாண்மை அறிவியல் நிலையம் ஹைதராபாத்தில் 27.01.2018 அன்று நடைபெற்ற கருத்தரங்கிலும், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 09.02.2018 முதல் 10.02.2018 அன்று நடைபெற்ற கருத்தரங்கிலும் கலந்து கொண்டு கண்காட்சி அமைத்தது. இக்கண்காட்சியில் பாரம்பரியமிக்க பயிர் இரகங்கள், தீவன விதைகள், காய்கறி விதைகள், தாது உப்புக் கலவை ஆகியவற்றை விவசாயிகளின் பார்வைக்காக வைத்திருந்தது.

**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**



வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த ஜனவரி முதல் மார்ச் 2018 வரை 162 மண் மாதிரி மற்றும் 48 பாசன நீர் மாதிரிகளை விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை மேற்கொண்டது. ஆய்வின் முடிவில் 162 மண்வள அட்டைகளும் 48 பாசன நீர் வள அட்டைகளும் பரிந்துரைகளுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மண் மாதிரிகளில் தழைச்சத்து, துத்தநாகசத்து, போரான்சத்து மற்றும் அங்ககச்சத்து குறைவாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மண்வளத்தை பாதுகாக்க உள்ளிட, வெளியிடப்பயிற்சிகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வயல்வெளி திடலை பார்வையிடும் போது பசுந்தாள் உரமிடவும், உயிர் உரங்களை இடவும், மண் பரிசோதனைக்கு ஏற்ப இரசாயன உரங்களை இடவும் (ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாக முறையில்) விவசாயிகளுக்கு வலியுறுத்தப்படுகின்றது.

**கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**



வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு ஜனவரி முதல் மார்ச் 2018 வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 412 விவசாயிகள் வருகை புரிந்துள்ளனர். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை, மீன் வளர்ப்புக்கேற்ற பண்ணைகள் பற்றிய செயல்விளக்கமும், பயிற்சி சம்பந்தமான தொழில்நுட்ப உரையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**வயல்வெளி பள்ளி**



நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை என்ற தலைப்பில் வயல்வெளி பள்ளி மூலக்காடு கிராமத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் நடத்தப்பட்டது. அதில் 25 விவசாயிகளும் 5 களப்பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்ட விதைப்பு முதல் அறுவடை வரை அனைத்து தொழில்நுட்பங்களும் செயல்விளக்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. முடிவில் வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள், வயல்வெளி பள்ளி சாராத இதர விவசாயிகள் மற்றும் வயல்வெளி பள்ளியில் உள்ள விவசாயிகள் உட்பட 75 நபர்கள் கலந்து கொண்டு வயல் விழா நடத்தப்பட்டது.

**வயல் விழா**



வேளாண்மை அறிவியல் நிலையம் ஐந்து வயல் விழாக்களை கடந்த ஜனவரி முதல் மார்ச் 2018 வரை நடத்தியது. நொச்சிப்பட்டி கிராமத்தில் உயர் விளைச்சல் தரும் பாசிப்பயறு இரகம் கோ-8 திடலின் வயல் விழா 02.01.2018 அன்றும், பெரப்பன்சோலை கிராமத்தில் புதிய நெல் இரகமான கோ-52 திடலின் வயல் விழா 26.02.2018 அன்றும், மூலக்காடு கிராமத்தில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை திடலின் வயல் விழா 20.02.2018 அன்றும், பட்டலூர் கிராமத்தில் கரும்பு பயிர்களுக்கு ஏற்ற ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை திடலின் வயல் விழா 23.02.2018 அன்றும் ஆர். புதுப்பட்டி மற்றும் திருமலைப்பட்டி கிராமத்தில் ரபி பருவத்திற்கேற்ற தரணி மற்றும் ஜி.கே.ஜி 9 நிலக்கடலை இரகங்கள் செயல்விளக்கத்திடலின் வயல் விழா 20.03.2018 மற்றும் 26.03.2018 அன்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் நடத்தப்பட்டது. வயல் விழாவில் செயல் விளக்கங்களில் ஈடுபடாத மற்ற விவசாயிகளும் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களும் பங்கேற்று புதிய தொழில்நுட்பங்களின் பலனை அறியப்பட்டனர்.

**வெற்றிக்கதை**

| | | |
|---|---|---|
| 1. | விவசாயின் பெயர் மற்றும் முகவரி |  **திரு. வி.எஸ். ராஜீ** த/பெ. **செல்லகுமரன்**<br>2/187, கந்தகிரி, ரெட்டிப்பட்டி,<br>நாமக்கல் மாவட்டம்.<br>அலைபேசி எண் : 98431 22043 |
| 2. | பண்ணை விபரம் | 2013 முதல் பரண்மேல் ஆடு வளர்ப்பு முறையில் 500 ஆடுகளை கொண்டு பண்ணை நடத்தி வருகின்றார். |
| 3. | ஆண்டு வருமானம் | ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 12,00,000/- |
| 4. | கடைபிடித்து வரும் புதிய தொழில்நுட்பங்கள் | ❖ குறைந்த செலவில் அடர் தீவனம் தயாரித்தல்.<br>❖ மரபுசாரா தீவனங்களை பயன்படுத்துதல்.<br>❖ தாதுஉப்புக்கலவை அளித்தல்.<br>❖ தீவன நறுக்கியை கொண்டு பசுந்தீவனங்களை நறுக்குதல்.<br>❖ போயர் ஆடுகளை தலச்சேரியுடனும், கன்னி ஆடுடனும் கலப்பினம் செய்தல்.<br>❖ பரண்மேல் முறையில் ஆடு வளர்ப்பு செய்தல். |
| 5. | செய்முறையில் உள்ள தொழில்நுட்பங்கள் | ❖ பரண்மேல் ஆடு வளர்ப்பு முறையில் ஆடுகளை வளர்த்தல்.<br>❖ கலப்பு பசுந்தீவனம் வளர்த்தல் மற்றும் தீவன நறுக்கியை கொண்டு பசுந்தீவனங்களை நறுக்குதல்.<br>❖ அடர்தீவனம் அளித்தல்.<br>❖ வறட்சிக்காலங்களில் மரபுசாரா தீவனங்களான பாக்கு மரம், மரவள்ளி குச்சி, பேரிச்சம்பழம், உடைந்த பிஸ்கட் கொண்டு ஆடுகளுக்கு தீவனம் அளித்தல். |
| 6. | நோய் மேலாண்மைக்காக கடைபிடிக்கும் தொழில்நுட்பங்கள் | குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசியை தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகிறார். |
| 7. | வேலைவாய்ப்பு அளித்தல் | பண்ணையில் 5 வேலையாட்கள் தொடந்து வருடம் முழுவதும் வேலை செய்தல் ( 2 குடும்ப நபர், 3 வேலையாட்கள்) |
| 8. | மற்ற நிறுவனங்களுடான தொடர்பு | ❖ வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்.<br>❖ கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகம், நாமக்கல். |
| 9. | பொருளாதார நிலை | வருடத்திற்கு நிகர இலாபமாக ரூ. 12,00,000 பெறுகிறார். |


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் - 637 002


ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்

பெறுநர்

திரு./ திருமதி. ______________________________

______________________________

அனுப்புநர் ______________________________


முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002